# ருக்குன் நெகாரா கொள்கைகளை மக்கள் மதிக்க வேண்டும்



ருக்குன் நெகாரா விழாவை தொடக்கி வைக்கும் மந்திரி புசார். உடன் பிரமுகர்கள்

(எம்.கே.வள்ளுவன்)

இஸ்கண்டார் புத்ரி, செப். 1-
இந்த நாட்டில் பல்வேறு இனங்களுக்கிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்திய ஒரு கறுப்பு தினமான மே 13 சம்பவத்திற்குப் பிறகு உருவாக்கப்பட்டது ருக்குன் நெகாரா. இன ஒற்றுமைக்கு அடித்தளமாக விளங்கும் இக்கோட்பாடுகளை மக்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும் என ஜொகூர் மந்திரி புசார் டத்தோ ஹஸ்னி முகமட் தெரிவித்தார்.

ஒற்றுமைதான் ருக்குன் நெகாராவின் மிக முக்கியமான அம்சமாகும். இதை ஒரு தேசிய சித்தாந்தமாகக் கருதி சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் ஆதரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கோத்தா இஸ்கண்டார், டத்தோ ஜாபர் முஹமட் கட்டடத்தில் அண்மையில் ஜொகூர் மாநில அளவிலான ருக்குன் நெகாராவின் 50 ஆவது ஆண்டு விழாவை அவர் தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில அரசாங்க செயலாளர் டத்தோ அஸ்மி ரோஹானி, ஜொகூர் மாநில சுகாதார, சுற்றுச்சூழல் குழுத் தலைவர் ஆர். வித்யானந்தன், ஜொகூர் மாநில கல்வி, தகவல், பாரம்பரியம் மற்றும் கலாச்சாரக் குழுத் தலைவர் மஸ்லான் பூஜாங், ஜொகூர் மாநில வர்த்தகம், ஒற்றுமை, பயனீட்டாளர் குழுத் தலைவர் டாக்டர் சோங் போட் புல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு இனங்களிடையே ஒற்றுமை என்பது ஒரு கலாச்சாரமாகத் திகழ வேண்டும். மதம், இன பேதமின்றி நம் அனைவரையும் அது ஒன்றிணைக்க முடியும் என்றும் மந்திரி புசார் குறிப்பிட்டா

Akhbar : Malaysia Nanban

Tarikh : 1 September 2020

Muka surat : 4

Tajuk : **Rakyat harus menghormati prinsip Rukun Negara**

Ringkasan : Rukun Negara telah diperkenalkan selepas peristiwa hitam yang telah berlaku pada 13 Mei. Menteri Besar Johor, Datuk Hasni Muhammad minta rakyat supaya mentaati Rukun Negara yang mengutamakan perpaduan kaum. Aspek perpaduan adalah elemen terpenting dalam Rukun Negara. YAB Menteri Besar menegaskan, Rukun Negara juga merupakan ideologi kebangsaan yang perlu didukung oleh semua lapisan masyarakat tanpa batasan kaum, adat resam dan anutan agama. Beliau berkata demikian semasa merasmikan Program Penghayatan Rukun Negara Peringkat Negeri Johor Tahun 2020, yang berlangsung di Bangunan Dato Jaafar Muhammad, Kota Iskandar. Yang turut hadir, Menteri Perpaduan Negara, Datuk Halimah Mohamed Sadique; Setiausaha Kerajaan Negeri, YB Dato' Haji Azmi Rohani, Pengerusi Jawatankuasa Kesihatan dan Alam Sekitar Negeri Johor, R. Vidhyananthan dan Pengerusi Jawatankuasa Perpaduan, Perdagangan dan Hal Ehwal Pengguna Negeri Johor, YB Dr. Chong Fat Full.